# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 28/2016** **நாள் : 15/12/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,
வணக்கம்,

## கூட்டு முறையீடு - காத்திருக்கும் போராட்டம்

மின்வாரிய ஊழியர்களின் ஊதிய உயர்வு, களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு, ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம், மஸ்தூர் பணிக்காலத்தை பதவி உயர்வுக்கு கணக்கில் கொள்ளுதல், புதிய பிரிவு அலுவலகங்களுக்கு பகுதி நேர ஊழியர்கள் பதவிகள் அனுமதித்து நிரப்புதல், கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு, 2014-15 ஆம் ஆண்டுக்கான போனஸ் நிலுவைத் தொகை வழங்குதல் போன்ற தேங்கிக் கிடக்கின்ற கோரிக்கைகளின் மீது பல முறை பேச்சு வார்த்தை நடத்திய பின்பும், அதை தீர்த்து வைக்க குறைந்த பட்ச நடவடிக்கை எடுக்காததால், உறங்கிக் கிடக்கும் மின் வாரிய நிர்வாகத்தின் கவனத்தை கவருகின்ற வகையில் மின்வாரிய தலைமை அலுவலகத்தில் கூட்டு முறையீடும், காத்திருக்கும் போராட்டமும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வருகின்றன.

ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் திட்டமிட்டவாறு தனது கோரிக்கையை வலியுறுத்துகின்ற வகையில் சென்னை மாநகரத்தில் குவிய உள்ளனர். சமீபத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பின் தலைவரும், பொதுச்செயலாளரும் கலந்து கொண்ட திருச்சி மண்டலம், மதுரை மண்டலம், கோவை மண்டலம், ஆகிய மண்டலக் குழு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்த மூன்று மண்டலங்களிலிருந்தும் 3500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொள்வதற்குண்டான வாகன ஏற்பாடுகள் உட்பட ஏற்பாடு செய்துள்ளதாக உற்சாக மளிக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன.

குறைந்த பட்சம் மண்டலத்திற்கு ஆயிரம் என்ற அடிப்படையில் பார்த்தாலும் 9000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொள்ள உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த தயாரிப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே முன்னாள் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் மரண மடைந்துள்ளார்கள். தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் அடித்த புயலால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இவைகள் அனைத்தையும் சரிசெய்யப்பட வேண்டிய ஒன்று. அதற்காக மின் வாரிய ஊழியர்கள் கரங்கோத்து செயலாற்ற உள்ளனர்.

மூன்று மாவட்டங்களும் புயலால் தாக்குண்ட உடனே, தமிழகத்தில் மூலை, முடுக்குகளில் உள்ள களப்பிரிவு ஊழியர்கள் தானாடா விட்டாலும், தன் சதை ஆடும் என்கின்ற வகையில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குவிந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவைகளெல்லாம் செய்ய வேண்டிய ஒன்று. மத்திய அமைப்பும் இப்பணிகளை கரங்கோர்த்து செய்யும்.

ஆனால் இரவு பகல் பாராமல் மழை,வெயில் பொருட்படுத்தாமல் பணியாற்றுகின்ற களப்பிரிவு ஊரியர்கள் பல்லாண்டு காலம் ஒரே பதவியில் பணியாற்றி, பதவி உயர்வு இன்றி, பணி ஒய்வு பெறும் நிலையைச் எடுத்துச் சொல்லி, அதைகளைய பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வந்த பின்னரும், உழைப்பை உறிஞ்சுவேன், உரிமையை அளிப்பதில் உறங்குவேன் என்ற நிலையை வாரியம் அடம்பிடித்து எடுத்து வருகிறது.

இதைப்போன்றுதான் ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர், பகுதி நேர ஊழியர்கள், கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள், போன்ற ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதில் எந்த உருப்படியான நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

கம்பியாளர் பதவியில் இருந்து மின்பாதை ஆய்வாளர் பதவி உயர்வு வழங்க அனுபவ காலம் கணக்கிட அடிப்படை சம்பளத்தைப் பெற்று பணியாற்றும் மஸ்தூர்களின் பணிக்காலத்தை கணக்கில் கொள்ள வேண்டாம் என்று வாரிய விதிகளுக்கு முரணாக ஒரு விளக்கத்தை வாரியம் அளிக்க, அது தவறு என்று சொல்லி அதிகாரிகளுக்கு புரியவைத்த பின்னர் அந்த பிழையான உத்தரவை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்களே தவிர, தவறுதலாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

ஊழியர்களின் ஊர்மாற்றம் போன்ற பிரச்சனைகளில் தனிநபர் விண்ணப்பத்தின் மீது வாரிய விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக எந்த நடவடிக்கையையும் எடுக்காத போக்கினை தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு அவர்கள் கையாள்கிறார்கள். நாம் கொடுக்கின்ற கடிதங்களின் மீது தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு எந்த குறிப்பையும் எழுதுவது இல்லை. குறிப்பு எழுதாத நிலையில் சம்மந்தப்பட்ட அலுவலக ஊழியர்கள் அந்த கடிதத்தின் மீது எந்தவித நடவடிக்கையையும் எடுக்காமதல் கிடப்பில் போடுகின்றனர்.

இந்நிலையை மாற்றவே, 22.12.2016 அன்று கோரிக்கைகளின் மீது கூட்டு முறையீட்டு ஆர்ப்பாட்டத்தை திட்டமிட்டவாறு நடத்தி கும்பகர்ண உறக்கத்தில் கிடக்கும் நிர்வாகத்தை அசைய வைக்க வேண்யுள்ளது.

பல மின் வட்டக்கிளைகளிலிருந்து புயலால் பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் 21-ந்தேதி வரை பணியாற்றி, 22-ந்தேதி நடைபெறுகின்ற காத்திருக்கும் போராட்டத்திலே கலந்து கொள்ள வேண்டும். காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் 23-ந்தேதி நிவாரணப்பணிகளில் ஈடுபடுவது என்பது வாரியத்தின் நடவடிக்கையோடு இணைந்து முடிவு செய்திட வேண்டியுள்ளது.

தோழர்களே, மாநட்டு முடிவான கோரிக்கைக்கான போராட்டத்தை வெற்றிக்கரமாக நடத்திடுவோம். கோரிக்கைகளை வென்றிடுவோம். சென்னையை நோக்கி திரண்டிடுவோம்......

தோழமையுள்ள



**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

குறிப்பு

புயலால் பாதிக்கப்பட்டுள்ள மூன்று மாவட்டங்களுக்கு, இதர மாவட்டங்களில் இருந்து வந்து நிவாரண பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு தங்குமிடம், உணவு, கழிப்பிட வசதிகள் ஆகியவற்றை முறையாக வாரியம் செய்துதர வேண்டும். அதில் குறைபாடுகள் ஏதும் இருக்குமானால் நமது திட்ட மற்றும் மாநில நிர்வாகிகளை அணுகுவதுடன் தேவைப்படின் மாநில மையத்தை தொடர்பு கொண்டு குறைகளை நிவர்த்தி செய்து முழுமனநிறைவுடன் பணியாற்றிட வேண்டும் நிவாரண பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு, ஏற்கனவே நிவாரண பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் பெற்றதை போல கூடுதல் ஊதியம் வாரயம் வழங்குவதற்கு மத்திய அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.